தொகுத்தறித் தேர்வு - 2024

-----

வகுப்பு 6

தமிழ்

காலஅளவு: 2.00 மணிநேரம் | மதிப்பெண்கள்: 60

பகுதி-1

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 6×1=6

1) தேசம் உடுத்திய நூலாடை எனக் கவிஞர் குறிப்பிடும் நூல் ...........
அ) திருவாசகம் ஆ) திருக்குறள் இ) திரிகடுகம் ஈ) திருப்பாவை

2) வாழ்வில் உயர கடினமாக ............ வேண்டும்.
அ) பேச ஆ) சிரிக்க இ) நடக்க ஈ) உழைக்க

3) மணிமேகலை கையில் இருந்த அமுத சுரபியில் உணவு இட்ட பெண் ...........
அ) சித்திரை ஆ) ஆதிரை இ) காயசண்டிகை ஈ) தீவதிலகை

4) ஏழைகளுக்கு உதவி செய்வதே ........... ஆகும்.
அ) பகை ஆ) ஈகை இ) வறுமை ஈ) கொடுமை

5) இனிமை + உயிர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ..........
அ) இன்உயிர் ஆ) இனிய உயிர் இ) இன்னுயிர் ஈ) இனிமைஉயிர்

6) காரணப்பெயரை வட்டமிடுக.
அ) மரம் ஆ) வளையல் இ) சுவர் ஈ) யானை

**ஆ) பொருத்துக.** 4×1=4

7) தமிழ் நாட்டுக் கவிஞர் - ஜி.யு.போப்

8) அன்னைதெரசா - பாரதியார்

9) தமிழ்க்கையேடு - பசிப்பிணி போக்கியவர்

10) வள்ளலார் - நோயாளிகளிடம் அன்பு காட்டியவர்

பகுதி-2

**இ) ஓரிரு சொற்களில் விடையளிக்க. (எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்)** 5×2=10

11) பழம், வேர் ஆகியவற்றின் இயல்புகள் யாவை?

12) ஒரு நாளும் விட்டுச் செல்லாதது எது?

13) காந்தியடிகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை ஏற்படுத்திய நிகழ்வைக் கூறுக.

14) அமுதசுரபியின் சிறப்பு யாது?

15) சொற்களின் வகைகளை எழுதுக.

16) உயர்வு நவிற்சி அணி என்பது யாது?

17) பிற உயிர்களை எவ்வாறு காப்பாற்ற வேண்டும்?

**ஈ) ஓரிரு தொடர்களில் விடையளிக்க.(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்)** 3×4=12

18) தாராபாரதி பாடலின் கருத்தைச் சுருக்கி எழுதுக.

19) குளிரால் வாடுபவர்களுக்கு நீங்கள் எவ்விதம் உதவுவீர்கள்?

20) காந்தியடிகளின் உடைமாற்றத்திற்குக் காரணமாக அமைந்த நிகழ்வினை எழுதுக.

21) எல்லா உயிர்களும் மகிழ்வோடு வாழப் புத்தர்பிரான் கூறும் அறிவுரைகள் யாவை?

22) அன்னை தெரசாவின் மனிதநேயம் பற்றிய வேறு ஒரு நிகழ்வினை அறிந்து எழுதுக.

23) அறுவகைப் பெயர்ச்சொற்களைச் சான்றுகளுடன் எழுதுக.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

## பகுதி - 3

உ) அடிபிறழாமல் எழுதுக. 4+2=6

24) புல்வெளி எல்லாம் ........... எனத் தொடங்கும் பாரதம் அன்றைய நாற்றங்கால் பாடலை எழுதுக.

25) பகுத்துண்டு ........... எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பகுதி - 4

ஊ) பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்) 5×2=10

26) தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

அ) ஒரு அழகிய சிற்றூரில் ஓர் குளம் இருந்தது.

ஆ) அது ஒரு இனிய பாடல்

27) ஒலி வேறுபாடறிந்து வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

மனம் - மணம்

28) இருபொருள் தருக.

அ) ஆறு ஆ) நகை

29) அடிக்கோடிட்ட சொல் எவ்வகைப்பெயர் என்பதை எழுதுக.

அ) புத்தகம் வாங்கி வந்தேன்.

ஆ) இறைவனைக் கை தொழுதேன்.

30) அகரவரிசைப்படுத்துக.

பெண்கள், பாரதம், புதுமை, பீலி, பேருந்து, பூமி,பழங்கள், பொதுக்கூட்டம், பையன், போக்குவரத்து, பின்னிரவு

31) கலைச்சொல் தருக.

அ) Trust ஆ) Mercy

32) ஏதேனும் ஒரு தலைப்பில் கவிதை எழுதுக.

அ) அன்பு ஆ) நட்பு

## பகுதி - 5

எ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க. 1×6=6

33) வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட நிகழ்வைச் சுருக்கமாக எழுதுக.

34) பாதம் கதையைச் சுருக்கி எழுதுக.

ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு மட்டும் விடையளிக்க. 1×6=6

35) நூல்கள் அனுப்ப வேண்டிப் பதிப்பகத்தாருக்குக் கடிதம் வரைக.

36) அறம் செய விரும்பு - கட்டுரை எழுதுக.

- - - - - - -

www.Padasalai.Net